2011 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஏனென்று கேட்டால், ஒவ்வொரு வண்டியும் பதிவு செய்யப்படுகின்றபோதே அதனுடைய அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக தனித் தொகை வசூலிக்கப்பட்டு அரசாங்கத்தில் இருக்கிறது. இடம் இருக்குமானால், உடனடியாக ஒவ்வோராண்டுமே கிட்டத்தட்ட 12 கட்டடங்கள், 13 கட்டடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தை எங்களுக்குக் கிடைப்பதற்கு உதவுவார்களேயானால், விரைவிலே பணிமனைக்கான கட்டடம் கட்டுவதற்குரிய முயற்சி எடுக்கப்படும். அதேநேரத்தில் பணிமனை அமைக்கின்றபோது ஏற்கெனவே இருக்கின்ற அரசு சட்ட திட்டம் என்பது 40 கிலோ மீட்டருக்கு ஒரு பணிமனைதான் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், இன்றைக்கு பேருந்துகள் அதிகமாக ஒவ்வோர் இடத்திலும் இயங்குகின்ற காரணத்தால், அருகிலே பணிமனை இருக்குமானால், அந்த இடத்திலே புதிய பணிமனை அமைக்கவும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், போக்குவரத்துக் கழகத்திலே நிதிநிலை மிகவும் குறைவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து உரிய தொகையைத் தருவார்களேயானால், அந்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

பகுதிநேரக் கூட்டுறவு அங்காடி

***115402—திரு. ராம. சுப்புராம்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 7

(அ) திருமயம் தொகுதி, அரிமளம் ஒன்றியம், வாளரமாணிக்கம் கூட்டுறவு அங்காடியைப் பிரித்து சமுத்திராபட்டியில் மற்றொரு பகுதிநேர அங்காடி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில், அரிமளம் ஒன்றியத்திலே கீழாநிலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கக் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் வாளரமாணிக்கம் நியாய விலைக் கடையில் மொத்தம் 580 குடும்ப அட்டைகள்தான் இருக்கின்றன. இதிலிருந்து சமுத்திராப்பட்டிக்கு பிரித்துத் தர வேண்டுமென்று சொன்னால், அந்தக் கிராமப்புறத்தைப் பொறுத்த அளவுக்கு 118 குடும்ப அட்டைகள்தான் இருக்கின்றன; தூரமும் ¾ கிலோ மீட்டர்தான் இருக்கிறது. அரசைப் பொறுத்த அளவுக்கு 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; 1½ கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. அதனால், சமுத்திராப்பட்டிக்குப் பகுதிநேர நியாய விலைக் கடை கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. ராம. சுப்புராம், இருக்கையில் இல்லை, அவருக்கு மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதி, அரிமளம் ஒன்றியம், வாளரமாணிக்கம் கூட்டுறவு அங்காடியிலே 580 குடும்ப அட்டைகள்தான் உள்ளன என்று அமைச்சர் அவர்கள் சொல்லியுள்ளார்கள். இருந்தாலும்கூட, சமுத்திராப்பட்டியிலே இருக்கிற மக்கள் அந்தப் பகுதியிலே சென்று வாங்குவதற்குச் சிரமமாக இருக்கிற காரணத்தாலே சிறப்பு அனுமதி பெற்று அதை அமைத்துத் தருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிற அதேநேரத்திலே தமிழகத்திலே கடந்த 5 ஆண்டுகளிலே இந்த முழுநேர சிறப்பு அங்காடிகளைப் பிரித்து பகுதிநேர அங்காடிகளாக கிட்டத்தட்ட 1½ கி.மீ. தூரமும், 175 குடும்ப அட்டைகளும் இருக்கிற அங்காடிகளைப் பகுதிநேர அங்காடிகளாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதில் இந்த 5 ஆண்டுகளிலே எத்தனை அங்காடிகளைப் பிரித்துத் தந்திருக்கிறார்கள் என்று தங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

2011 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தலைவர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்புதான் பொதுவாக சில விதிகளைத் தளர்த்தினோம். பகுதிநேரக் கடைகள் வேண்டுமென்று சொன்னால், 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; 2 கிலோ. மீட்டர் தூரம் இருக்க வேண்டுமென்று இருந்தது. சிறப்புச் சலுகைகளைப் பயன்படுத்தித்தான் 1½ கிலோ மீட்டர், 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்ற விதிகளைத் தளர்த்தியதன் மூலமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 8 முழுநேரக் கடைகளும், 46 பகுதிநேரக் கடைகளுமாக ஒட்டுமொத்தமாக அந்த மாவட்டத்தில் மட்டும் 54 புதிய பகுதிநேரக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தளவிற்கு 1,198 முழுநேரக் கடைகளும், 2,193 பகுதி நேரக் கடைகளும், ஆக மொத்தம் இந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில் 3,391 பொது விநியோகக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 9-40

சிறப்புச் சலுகையைப் பயன்படுத்தி சமுத்திராப்பட்டியிலே கடைகளைத் திறக்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அந்த வாளரமாணிக்கம் நியாய விலைக் கடையில் 580 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. பகுதிநேரக் கடை கேட்டிருக்கிற சமுத்திரப்பட்டியிலே 118 குடும்ப அட்டைகள்தான் இருக்கின்றன என்று சொன்னோம். சிறப்புச் சலுகை என்று பார்க்கிறபோது இப்பொழுதுகூட சமீபத்திலே ஒரு வார காலத்திற்கு முன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்கள் ஆணையிட்டதன்பேரில், அவர்களுடைய அறிவுரையின்பேரில் மலைப் பகுதியில் கடைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மலைப் பகுதியிலே பல்வேறு கிராமங்கள் 6 கிலோ மீட்டர் 7 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றன. அங்கே குடும்ப அட்டைகள் குறைவாக இருக்கின்றன. தமிழ்நாட்டில் எங்கெல்லாம் மலைப் பகுதி இருக்கிறதோ அந்த மலைப் பகுதியில் 100 குடும்ப அட்டைகள் மட்டும் இருந்தால்போதும் என்று மலைப் பகுதிக்கு மட்டும் சிறப்புச் சலுகையாக மாண்புமிகு முதலமைச்சருடைய ஆலோசனையோடு

[2011 பிப்ரவரி 7

புதிதாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படி எங்காவது மலைப் பகுதியிலே 100 கார்டுகள் மட்டும் இருக்கிற பகுதியிலே பகுதிநேரக் கடைகள் கேட்டால் கட்டாயம் இந்த அரசு வழங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுசாமி.

திரு. செ. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம் என்பது மலைவாழ் மக்கள் நிறைந்த பகுதியாகும். அப்பகுதியில் 15 கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் ரேஷன் பொருட்கள் வாங்குகிற நிலை இருக்கிறது. இப்பொழுதுகூட அமைச்சர் அவர்கள் 100 கார்டுகள் இருந்தால் போதும், பகுதிநேரக் கடையைப் பிரிக்க ஆணை இருக்கிறது என்று இங்கே பதிவு செய்துள்ளார். ஆனால், மலையைப் பொறுத்தவரை, ஏற்கெனவே பகுதிநேரக் கடை பிரித்திருக்கிறார்கள். அந்தப் பகுதிநேரக் கடையில் இருந்து மீண்டும் ஒரு பகுதிநேரக் கடையைப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொது விநியோகக் கடை என்று சொன்னால் அந்தக் கடையிலே பணிபுரிகின்ற விற்பனையாளர்களுக்குச் சம்பளம் தர வேண்டும். குறைந்தபட்சம் முழுநேரக் கடைகளிலே 500 கார்டுகள் இருந்தால்தான் அவர்களுக்கு அரசின் சார்பாக சம்பளம் வழங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. விற்பனையாளர்களால் புதியதாகச் சலுகை வேண்டுமென்று கோரிக்கை கொடுக்கப்பட்டு, அவர்களை ஓர் ஆண்டிலேயே பணி நிரந்தரம் செய்யலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மாதக் காலத்திற்கு முன்னால் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஆனால், முழுநேரக் கடைகள் என்று பார்க்கிறபோது, அவர் முழுநேரக் கடைகளிலே பணியாற்ற வேண்டும். அதாவது, குறைந்தபட்சம் 500 கார்டுகள் இருக்க வேண்டும். பகுதிநேரக் கடைகள் என்று பார்க்கிறபோது, 150 கார்டுகள், ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் என்று நிலப் பரப்பிலே இருந்தாலும்கூட, மலைப் பகுதி என்று பார்க்கிறபோது 100 கார்டுகள் இருந்தால் போதும்; பகுதிநேரக்

2011 பிப்ரவரி 7]

கடைகள் கொடுக்கலாம் என்று புதியதாக ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பயன்படுத்தி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்பார்களேயானால் கட்டாயம் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நியாய விலைக் கடைகள்மூலம் சிறப்பாகப் பொது விநியோகத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒரு கடையிலிருந்து ஒரு புதிய நியாய விலைக் கடை கிளை திறக்க வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று 150 குடும்ப அட்டைகளும், ஒன்றரை கிலோ மீட்டர் தூரமும் இருந்தால் திறக்கலாம் என்று விதிகள் இருந்தாலும், இரண்டு கிளைக் கடைகளுக்குமேல் திறக்க வேண்டுமென்றால் அதற்கு அனுமதியில்லை. மூன்றாவது கடையைத் திறக்க வேண்டுமென்றால் அது ஒரு புதிய நியாய விலைக் கடையாகத்தான் இருக்க வேண்டுமென்று சொல்லி, சட்டம் புதியதாக இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் 150 குடும்ப அட்டைகள் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருந்தாலும்கூட, இரண்டு கடைகளுக்கு மேல் திறப்பதற்கு சட்டத்தில் அனுமதியில்லை. ஆகவே, அதையும் தளர்த்துவதோடு, கிராமப்புறங்களை எடுத்துக்கொண்டால் எத்தனை கடைகள் வேண்டுமென்றாலும், குறைந்தபட்சம் 4 நியாய விலைக் கடைகள் திறப்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். ஒரு கிராமத்தில் 100 குடும்ப அட்டைகள் இருந்தால்கூட திறக்கலாம் என்று இந்த விதிகளை மாற்றினால்தான், 100 குடும்ப அட்டைகள் இருந்தால் போதும்; 4 கிளைக் கடைகள் வரை திறக்கலாம் என்று அனுமதித்தால் மட்டும்தான் பொது மக்களுக்குப் பயன் ஏற்படும். 150 குடும்ப அட்டைகளும், ஒன்றரை கிலோ மீட்டர் தூரமும் இருந்தால் போதுமென்று சொன்னால், இரண்டு கிளைக் கடைகளுக்குமேல் திறக்கவே முடியாது. ஆகவே, இதையும் தளர்த்தித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மக்கள் பிரதிநிதியாக இருப்பவர்களால்

பெரும்பான்மையாக அரசுக்கு மனு எந்த அளவிலே பரிந்துரை செய்யப்படுகிறது என்று சொன்னால், 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட கார்டுகள் இருக்கின்றன. அதனால் காலையிலிருந்து மாலைவரை கால்கடுக்க நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே, முழுநேரக் கடைகளைப் பிரித்துத் தர வேண்டுமென்றுதான் பல கோரிக்கைகள் வந்தன. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு இரண்டாயிரம் கார்டுகள் உள்ள கடைகளையெல்லாம் பிரித்துத் தர வேண்டுமென்று அறிவுறுத்தி, அப்படிப் பிரித்த வகையிலே சென்ற ஆண்டு மட்டும் 452 கடைகள் தமிழ்நாட்டிலே பிரிக்கப்பட்டன. இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1,600 கார்டுகள் இருந்தால் அவற்றை இரண்டாகப் பிரியுங்கள் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது, இந்த ஆண்டில் மட்டும் 1,600 கார்டுகள் உள்ள 448 கடைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் என்ன குறிப்பிடுகிறார்கள் என்று சொன்னால், பொதுவாக முழுநேரக் கடைகளிலிருந்து பகுதிநேரக் கடை என்று ஒன்றைப் பிரிக்கிறோம். சிறப்புச் சலுகையைப் பயன்படுத்தி இன்னொன்றையும் பிரிக்கிறோம். ஆனால், தொடர்ந்து அதே பகுதிநேரக் கடையிலிருந்து 3, 4 என்று ஏன் பிரிக்கக்கூடாது; ஏன் 100 கார்டுகள் இருந்தால் கொடுக்கக்கூடாது என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்துபேசி, வருகின்ற நிதியாண்டில் இந்த அரசு பரிசிலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறை தொகுதியில் ஏற்கெனவே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல், மலைப் பகுதியில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் காலையிலிருந்து மாலை வரை வேலைக்குச் சென்றுவிட்டு, மாலைக்குமேல் வந்து ரேஷன் வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். 1,367 கார்டுகள் சிந்தாமணி கடையில் இருக்கின்றன. அவற்றை இரண்டாகப் பிரித்து,

2011 பிப்ரவரி 7]

மகளிர் முல்லை சுய உதவிக் குழுவிற்கு வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அண்ணன் தளபதி ஸ்டாலின் அவர்கள், மகளிர் சுய உதவிக் குழுவிற்கு தமிழகத்தில் முக்கியத்துவம் வழங்குகின்ற இந்த நேரத்தில், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஏற்கனவே கொண்டு வந்திருக்கின்றேன். வால்பாறை, சிந்தாமணி ரேஷன் கடையை இரண்டாகப் பிரித்து, மகளிர் சுய உதவிக் குழுவிற்கு ஒன்று வழங்குவதற்கு முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடைகள் கொடுக்க வேண்டுமென்பதிலே மாற்றுக் கருத்து அல்ல. பல இடங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையைப் பெற்று, ஆங்காங்கே புதிதாகக் கடைகள் துவக்கப்பட்டிருக்கின்றன. அதேநேரத்தில் பொது விநியோகக் கடைகள் என்று பார்க்கிறபோது, நிருவாகம் என்று பார்க்கிறபோது, கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு வகையிலே இதுபோன்ற கடைகளைப் பெரும்பான்மையாகத் தமிழகத்தில் நடத்திக் கொண்டிருக்கின்றன. இன்னொன்று, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக, இந்தப் பொது விநியோகக் கடைகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். மேலும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகவும் இந்தக் கடைகள் நடத்தப்படுகின்றன. இதிலே சில இடங்களிலே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் சிறப்பாக நடத்துகின்றார்கள். பாராட்டுகின்ற அளவிற்கு நடத்தப்படுகின்றன. நானேகூட, ஒரு முறை சட்டமன்ற உறுப்பினரின் அழைப்பை ஏற்று வால்பாறையிலே திடீர் தணிக்கை செய்தேன். மகளிர் சுய உதவிக் குழுமூலம் சிறப்பாக நடத்திக் கொண்டிருந்தார்கள். அதேபோன்று, ஊட்டியிலே ஒரு முறை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ராமச்சந்திரனை அழைத்துக் கொண்டு கூடலூர் பகுதியிலே மகளிர் சுய உதவிக் குழுமூலம் நடத்தப்படும் பொது விநியோகக் கடையை நாங்கள் சென்று பார்க்கிறபோது, பொது மக்களிடமிருந்து புகார் வந்தது. இந்தக் கடைகளை மகளிர் சுய உதவிக் குழுக்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்; எங்களுக்கு உரிய பொருள் கிடைக்கவில்லை; இந்தக் கடையை நீங்கள் எப்படியாவது கூட்டுறவுச் சங்கங்களுக்கு

மாற்றித் தர வேண்டுமென்று மனு கொடுத்தார்கள். நாங்கள் நேரிடையாக அந்தக் கடையைத் தணிக்கை செய்தபோது, பொது விநியோகக் கடைகளில் பெரும்பான்மையான பொருட்கள் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் நான் சொல்லி, அந்த இரண்டு கடைகளை இரத்து செய்துவிட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக அந்தக் கடைகளை நடத்துவதற்கு ஆணை பிறப்பித்துவிட்டு வந்தேன். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், மகளிர் சுய உதவிக் குழுக்கள் பொது விநியோகக் கடைகளை நடத்தக்கூடாது என்று சொல்லவில்லை இந்த அரசு. மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரையைப் பெற்று அவர்கள் முறையாக நடத்துவார்கள் என்று சொன்னால், இந்த அரசு அனுமதிக்கும். ஏனென்று சொன்னால், மேற்பார்வையைப் பொறுத்தவரை கூட்டுறவுச் சங்கக் கடைகளாக இருந்தால், பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள் மேற்பார்வையிட முடியும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்துகிறது என்று சொன்னால், அவற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்பார்வையிட முடியும். ஆனால், மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்த அளவுக்கு நேரிடையாகப் பொருட்களை வாங்கிக்கொண்டு அந்தப் பணியைப் பார்க்கிறபோது, மேற்பார்வை என்பது குறைவாகவே இருக்கிறது. மாவட்ட வழங்கல் அதிகாரி மட்டும்தான் அதைப் பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. அதனால், மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்வாரேயானால், அவர்கள் நியாயமாக நடத்துவார்கள் என்று சொன்னால், பொது மக்களுக்குப் பொருள்கள் போய்ச் சேரும் என்று சொன்னால் இந்த அரசு கட்டாயமாக அனுமதிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராசிபுரம் தொகுதிக்கு, சட்டமன்றத்திலே வைத்த அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது தமிழகத்திலே, வீடு தேடிச் சென்று ரேஷன் பொருட்களைத் தரக்கூடிய திட்டத்தை தமிழகத்தில் முதன்முதலாக சென்னையிலே துவக்கி இருக்கின்றீர்கள். அந்தத் திட்டம் அனைத்து நகர்ப்புறங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும், கிராமப்புறங்களுக்கும்

2011 பிப்ரவரி 7]

விரிவுபடுத்தப்படுமா என்பதையும், எப்போது அந்தத் திட்டத்தைத் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்த இருக்கின்றீர்கள் என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–50

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வந்த ஒரு தவறான செய்தியை வைத்துக் கொண்டு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், வீட்டுக்கு வீடு பொது விநியோகக் கடைகள்மூலம் பொருள்கள் போய்ச் சேருமா; சென்னையிலே துவக்கி வைத்திருக்கிறார்கள்; தமிழகம் முழுவதிலும் அது எப்பொழுது வரும்; எனது தொகுதிக்கு எப்பொழுது வரும் என்று வினாவை எழுப்பியிருக்கிறார்கள். அதுவல்ல; அந்த mobile team, அதாவது வண்டிகள்மூலமாகப் பொருட்களை வழங்குகிற திட்டம் ஏற்கெனவே 10 ஆண்டுக் காலமாக தொடர்ந்து இருக்கிறது. அதுவும் குறிப்பாக மலைப் பகுதிகளிலே அந்தத் திட்டம் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சி, திருநெல்வேலி, விழுப்புரம் போன்ற பகுதிகளிலே அந்தத் திட்டம் இப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டுகூட எங்களுடைய துறையின் சார்பாக நான் மானியக் கோரிக்கையைப் படிக்கிறபொழுதுகூட 13 வண்டிகள் மூலமாகப் பொருள்கள் கொடுக்கப்படுகின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறேன். ஆக, தமிழகம் முழுவதும் 10 ஆண்டு காலமாக இந்த mobile team மூலம் ரேஷன் பொருட்கள் விநியோகம் என்பது நடந்து கொண்டுதான் இருக்கிறது. எப்படி என்று சொன்னால், நான் ஆரம்பத்திலேயே சொன்னதுபோல மலைப் பகுதியில், அங்கு கடைகள் ஆரம்பிப்பதற்கு இடமே கிடைக்காது. ஆனால் அங்கு இருப்பவர்களுக்குப் பொருள்கள் போய்ச் சேரவேண்டும். ஒரு குறிப்பிட்ட தேதியைச் சொல்லிவிட்டு அந்த mobile வண்டியைக் கொண்டு போய் அங்கு நிறுத்திவிடுவார்கள். அந்த மலைப் பகுதியில் இருப்பவர்கள் எல்லாம் பொருள்களை வாங்கிக்கொண்டு போவார்கள். இடம் கிடைக்காத காரணத்தால் mobile வண்டியை use பண்ணுகிறோமேயொழிய, வீட்டுக்கு வீடு கொடுக்கிற திட்டமே அல்ல. தற்போது 1,600 கார்டுகள் இருந்தால், இரண்டு கடைகளாகப் பிரிக்கலாம் என்று புதியதாக ஆணை பிறப்பித்திருக்கிறோம். இங்கே

[2011 பிப்ரவரி 7

சென்னையைப் பொறுத்த அளவிற்கு பல இடங்களிலே 1,600 கார்டுகளைப் பிரித்து 800 கார்டுகளுக்கு ஓர் இடம் பார்க்கிறபொழுது இடம் கிடைக்கவில்லை. அதுவும் குறிப்பாக, கோடம்பாக்கம் போன்ற பகுதியிலே இடம் கிடைக்கவில்லை. இடம் கிடைக்காத காரணத்தினால் கூட்டுறவு நிருவாகத்தின்மூலமாக இங்கே சென்னையைப் பொறுத்த அளவிற்கு mobile வண்டியை வைத்துக் கொண்டு, எப்படி மலைப் பகுதியிலே இடம் கிடைக்காத காரணத்தினால் ஓர் இடத்தில் mobile வண்டியில் பொருள்களை வைத்துக் கொண்டு கொடுத்தார்களோ அதேபோல, சென்னையைப் பொறுத்த அளவில் முதன்முதலாக, தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் 10 ஆண்டுகளாக இருக்கிறது. சென்னையைப் பொறுத்த அளவிற்கு முதன்முதலாக என்று சொல்வதைவிட பரீட்சார்த்தமாக ஒரு மாத காலம் கொடுத்தால் சரியாக இருக்குமா என்ற அடிப்படையில்தான் கோடம்பாக்கம் பகுதியிலே நான்கு தினங்களுக்கு முன்னால், ஓர் இடத்தைக் குறிப்பிட்டு மூன்று தெருக்களுக்கு உள்ள கார்டுகளை வைத்துக்கொண்டு ஒரு பகுதியிலே கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டு அந்த வண்டிகளை நிறுத்தி ஒரு நாள் கொடுத்தார்கள். வீடு வீடாகப் பொருட்களைக் கொண்டு வந்து கொடுப்பதற்கு ஒரு திட்டம் இருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. 'இந்து' என்கிற ஆங்கிலப் பத்திரிகையிலே செய்தி வந்தது. அது அப்படியல்ல; இது mobile team என்றுதான் அதிலே போட்டிருந்தார்கள். வேறு சில பத்திரிகைகளிலே அப்படிச் செய்திகள் வந்தன; அது தவறான செய்தி. அப்படி ஒரு திட்டம் தமிழக அரசின் சார்பாக இப்பொழுது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

14—

பாதுகாப்பு

*121263—திரு. ஆர். சாமி:

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியில் சமணர் படுகைகள், குகைக் கோயில்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?